மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவில் குறிப்பிட்டுள்ள பால மானது, கோயம்புத்தூர்-திண்டுக்கல் எம்.இ.எச். சாலை, கிலோ மீட்டர் 181/8-ல் அமைந்துள்ளது. இப்பாலத்தைத் திரும்பக் கட்டும் பணி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணித் தொகுப்புப் பட்டியலில் மாநில நெடுஞ்சாலை என்ற தலைப்பின் கீழே, ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய் மதிப் பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல, எல்லா இடங்களிலுமுள்ள பாலங் களைச் சரி செய்வதற்கும், சாலைகளை மேம்படுத்துவதற் கும், ஒரு முனைப்பான திட்டத்தை, நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்த 9 மாத காலத்திலே நாங்கள் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அனைத்தையும் ஒரே நேரத்திலே நிறைவேற்றுவதற்கு பல நூறு கோடி ரூபாய் வேண்டியிருக்கின்ற காரணத்தால், மிக மோசமான பகுதிகளை சீர்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து, படிப்படியாக திட்டங்களை எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்தத் திட்டமும், நம்முடைய மதிப்பீட்டுப் பட்டிய லிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்வதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, நிச்சயமாக வரும் ஆண்டில், இந்தப் பாலத்தை கட்டுவதற்கான முயற்சி யை இந்த அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 171. திரு. ச. புரட்சிமணி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

17—

மங்களூர் தொகுதியில் கூட்டுக்குடிநீர்த் திட்டம்

*1261 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் எஸ். நரையூர் வடபாதி போன்ற கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள் ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் பெருகுதியில், எஸ். நரையூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள்

அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது. வடபாதி கிராமத்தில் குடிநீர் வசதி போதுமானதாக உள்ளதால் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், எஸ். நரையூர் என்ற கிராமம் சேர்க்கப்பட்டதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வடபாதி கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை மிகவும் மோசமாக காணப்படுகிறது. எனவே, அந்தக் கிராமத்தையும், இந்தத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதியில் உள்ள வடபாதி கிராமம் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. ஏனெனில், இந்தக் கிராமத்தில் 1980-ல் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் முழுமையான அளவு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இது தவிர, இரண்டு கையிறைப்பான்களும் இயங்கிக் கொண்டு வருகின்ற காரணத்தாலே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், இந்த கிராமத்தை இப்போது சேர்ப்பதற்கு இயலாத நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. புரட்சிமணி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஆய்வுகள் விரைவில் முடிக்கப்பட்டு, இந்த ஆண்டிலே, இதனை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக இந்தத் திட்டத்தை முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 172. திரு எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

172—

நரிமணம் பகுதியை நகரியமாக்குதல்.

*1545—திரு. எஸ். ஆசைமணி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;